https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

28th MAY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 29



பலவீனமான முஸ்லிம் தலைமைகள்
07




இது தளபதியின் உத்தரவு
06

# சப்ரிக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை



தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசி கடத்தலில் சிக்கிய அலி சப்ரி எம்பியை பதவி நீக்குவதற்காக நாடாளுமன்றில் விரைவில் நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் பதவி விலக வேண்டும் என்று எம்பிக்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அவரை விளக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அது முடியாதுவிட்டால் நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அவரைப் பதவி விளக்குவத்தைப்பற்றி எம்பிக்கள் ஆலோசித்து 02

## சப்ரகமுவ ஆளுநராக நவீன்



சப்ரகமுவ மாகாண ஆளுநரும் மாற்றப்படவுள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.


தற்போதைய ஆளுநர் டிரிகி கொப்பேக்கடுவ வெளிநாட்டுக்கு சென்றுள்ளார்.அவர் திரும்பி வந்ததும் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது என்று 02



## ஜனகவிடம் ரூ. 3200 கோடி கேட்கும் அரசு

மின் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்காமல் நாட்களை இழுத்தடித்ததன் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு 3200 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த தொகையை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்னாயக்கவிடம் இருந்து அரவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்தது. 02







## இனி எம்பிக்களும் சோதிக்கப்டுவர்

அலி சப்ரியின் விவகாரத்துக்கு பின் இனி விமான நிலையத்தில் விஐபி பகுதியால் செல்லும் எம்பிக்கள் உள்ளிட்ட விஐபிக்களும் சோதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் ஸ்கேனர் இயந்திரத்தை பொருந்துமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக சுங்கத் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் எம்பிக்களுக்கு இவ்வாறான சிறப்புரிமை தேவை இல்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



புதுசுடர்
www.puthusudar.lk
2023 MAY 28 - SUNDAY

# அன்று நல்லவர்: இன்று கெட்டவர்

நாட்டின் பொருளாதாரம் இந்த நிலைக்குச் செல்வதற்குக் காரணம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல அதிகாரிகளும்தான்.

அதிகாரிகள் அடிக்கின்ற கொள்ளை–அவர்கள் புரியும் ஊழல் எல்லையற்றவை. புதிதாக வருகின்ற அமைச்சர்களை கைக்குள் போட்டுக்கொண்டு–அவர்களையும் திருடுவதற்கு பழக்கும் அதிகாரிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

குறிப்பிட்ட துறையில் நீண்ட காலம் இருப்பதால் அதிகாரிகளுக்குத்தான் தெரியும் அதில் உள்ள ஓட்டையெல்லாம்.

திருடிவிட்டு அந்த ஓட்டை வழியாகப் புகுந்து தப்பிவிடுகிறார்கள். சிக்கினாலும் தண்டனை இல்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ மாத்திரம் காரணமல்ல.கூடவே இருந்து சந்தர்ப்பதை பயன்படுத்தி கொள்ளையடித்த அதிகாரிகளும்தான் காரணம்..

பல அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதற்கு காரணம் அதிகாரிகள்தான்.

நாடாளுமன்ற உழிந குழுவின் அறிக்கைகள் வருகின்றன.அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கைகள் வருகின்றன.

அந்த அறிக்கைகளை பார்க்கும்போது தலையே சுற்றும் அளவுக்கு அரச நிறுவனங்களில் நஷ்டம்–கொள்ளை. எல்லாமே கோடிக்கணக்கில்.

அந்தப் பணம் இருந்தால் நாட்டில் வறுமையை ஒழித்துவிடலாம்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிவிடலாம். அந்தளவுக்கு மோசடி.

அதிகாரிகளின் ஊழல்,மோசடியும் நிர்வாகத் திறமையின்மையுமே இதற்கு காரணம்.

கோத்தாவால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார பிரச்சினைகளில் முக்கியமானது எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அவற்றுக்கான விலையேற்றம்.

லிட்ரோ கேஸ் நிறுவனத்துக்கும் கோத்தாவால் நியமிக்கப்பட்ட 10 பேர் அடிக்கும் கொமிசன் காரணமாகவே கேஸின் விலை இந்தளவு அதிகரித்திருக்கிறது என்று சில ஊடகங்கள் அப்போது சுட்டிக்காட்டின.

அந்த 10 பேரும் சம்பாதித்த கோடிக்கணக்கான பணத்தை டொலராக மாற்றி சுவிஸ் வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டன்ன.

அதேபோல் பெற்றோல் ,டீசல் போன்றவற்றின் விலையேற்றத்துக்கு முக்கிய காரணம் கொமிஷனை அதிகப்படுத்துவதற்காக கூடுதலான விலையில் விற்கும் நிறுவனங்களிடம் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்தமையே.

இப்படி அதிகாரிகள் செய்து வருகின்ற ஊழல்,மோசடிகளே பொருளாதார பிரச்சினைகளுக்கு காரணம்.அரச நிறுவனங்கள் அனைத்திலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால்,எந்த அதிகாரிக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை எடுத்தது கிடையாது.

அரசுக்குத் தேவை தனது திட்டத்துக்கு ஒத்துப்போகின்ற அதிகாரிகள்தான்.அவர்கள் திருடர்களாக இருக்கலாம்நல்லவர்களாக இருக்கலாம். எவராக இருந்தாலும் பரவாயில்லை.அவர் அரசுடன் ஒத்துப்போனால் அவர்தான் நல்ல அதிகாரிதிறமையான அதிகாரி. ஒத்துப்போகவில்லை என்றால் தூக்கப்படுவார்.

அதுதான் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு நடந்தது.

அவரது பிரச்சினை என்ன ? ஏன் நாடாளுமன்ற விசேட பிரேரணையின் ஊடாக பதவியில் இருந்தது நீக்கப்பட்டார்?

எம் எல்லோருக்கும் தெரியும்.அரசின் மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்தார். அதற்கு அனுமதி வழங்க மறுத்தார். அதுதான் அவர் செய்த குற்றம்.

அவர் திருட்டுக் குற்றத்துக்காக தண்டிக்கப்படவில்லை.மக்களின் சார்பாக–அரசுக்கு எதிராக நின்றதால் தண்டிக்கப்பட்டார்.

அவரை இந்தப் பதவியில் அமர்த்தியதே இந்த அரசுதான்.அன்று நல்லவராக இருந்தார்.இன்று கெட்டவராக மாறிவிட்டார். அரசுக்கு ஒத்துப்போகாததால்.

ஊழல்.மோசடிகள் செய்த குற்றவாளிகள் இப்படித் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லவே இல்லை.அரசுக்கு நல்ல பிள்ளையாக இருந்தால் போதும்.அவர் நல்ல திறமையான அதிகாரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.அவர் திருடராகவும் இருக்கலாம்.

இப்படிப் போனால் எப்படி நாட்டை முன்னேற்றுவது?


## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொற்றா நோய் தொடர்பான பரிசோதனை

(நூருள் ஹுதா உமர்)



தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் செய்யப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாகவும் தொற்றா நோய்த்தடுப்பு வாரத்தினை முன்னிட்டும் இன்று (26) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ் இர்சாத் மற்றும் குழுவினரால் தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகளும் ஆலோசனைகளும் வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் அவர்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் செய்யப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களின் இணைப்பாளராக செயற்படும் வைத்தியர் எம்.எச்.சரூக் கலந்து கொண்டதுடன் குறித்த நிகழ்வுகளை மேற்பார்வை செய்தமையும் குறிப்பிடத்தக்கது




### சப்ரிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வருகிறார்கள் என்று அறிய முடிகிறது.

அலி சப்ரியை எம்பி பதவியில் இருந்து நீக்கும் யோசனை ஒன்றை சமல் ராஜபக்ஸவும் நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைத்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஏனைய கட்சித் தலைவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவின் தலைமையில் நாடாளுமன்றத் கட்டிடத் தொகுதியில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜேவிபியும் அலி சப்ரி பிரதிநிதித்துவப்படுத்தும் றிசாத் பதியுதீனின் கட்சியும் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, இவரை பதவி நீக்கும் இன்னொரு யோசனையை எதிர்க்கட்சி எம்பிக்கள் 20 பேர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தனவிடம் ஒப்படைத்துள்ளனர்.

இருந்தாலும், இந்த விவகாரத்தில் தலையிடும் அதிகாரம் தனக்கு இல்லை என்று கூறி சபாநாயகர் கை விரித்துள்ளார்.

இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும் பட்சத்தில் நம்பிக்கை இல்லா பிரேரணை வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சப்ரகமுவ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்படுகிறது.

அவரது இடத்துக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் நவீன் திஸாநாயக்க ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார் என்று அறிய முடிகிறது.

### ஜனகவிடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆனால்,ஜனக ரத்நாயக்க அதற்கு அனுமதி வழங்கவில்லை.

45 நாட்கள் அது இழுபறியில் இருந்தது. அந்த 45 நாட்களில் அரசுக்கு 3200 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்றும் அதை ஜனக ரத்நாயக்கவிடம் இருந்து அரவிடுவதற்கே அரசு தீர்மானித்துள்ளது என்றும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விசேகர தெரிவித்துள்ளார்.








# எனக்கு அமைச்சுப் பதவி வேண்டாம்

அரசில் இணைவதற்குத் தீர்மானித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி எம்பி பி.ஹரிசன் தனக்கு அமைச்சுப் பதவி எதுவும் தேவையில்லை என்று கூறினார்.

நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்கிலேயே தான் அரசுடன் இணையவுள்ளேன் என்று அவர் மேலும் கூறினார்.

தான் மட்டுமல்ல மொத்தமாக 20 பேர் அரசுடன் இணையவுள்ளனர்.அவர்களுள் 17 பேர் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள்.மூவர் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் இணைந்திருக்கும் வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்தார்.

## உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலா தலங்களில்

# இரண்டாவது இடத்தைப் பிடித்த சவூதி அரேபியா












(காலித் ரிஸ்வான்)

2022 ஆம் ஆண்டில் 16.6 மில்லியன் வெளிநாட்டினர் சவூதி அரேபியாவை பார்வையிட்டனர்.

2022 ஆம் ஆண்டில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த சிறந்த நாடுகளில், உலக சுற்றுலா அமைப்பின் (WTO) குறியீட்டில், 12 இடங்கள் முன்னேறி சவூதி அரேபியா உலகளவில் 13 வது இடத்தைப் பிடித்தது. 2019 ஆம் ஆண்டில் 25 வது இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

அனைத்து பயண நோக்கங்களுக்காகவும் சவூதி அரேபியாவுக்கு வருகை தந்த சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2022 இல் 16.6 மில்லியனை எட்டியது என்று உலக சுற்றுலா அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக வர்த்தக அமைப்பால் வெளியிடப்பட்ட மே 2023க்கான றுவுழ அறிக்கையின் படி, சர்வதேச சுற்றுலா வருவாய் குறியீட்டில் சவூதி அரேபியா 2022 இல் 11 வது இடத்தைப் பிடித்தது. 2019 இல் 27 வது இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பல்வேறு நோக்கங்களுக்காக சுமார் 7.8 மில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் சவூதி அரேபியாவுக்கு வந்து சென்றுள்ளனர், சுற்றுலாத் துறையில் சவூதி தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருவதை இது தெளிவு படுத்துகிறது.

இது 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது 64மூ அதிகமாகும், இது சுற்றுலாத் துறையின் அதிகபட்ச காலாண்டு செயல்திறனைப் பிரதிபலிக்கிறது.

உலக வர்த்தக அமைப்பின் சமீபத்திய தரவுகளின்படி, இந்த காலகட்டத்தில் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலா தலங்களின் பட்டியலில் சவூதி அரேபியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் அஹ்மத் அல்-கதீப், சவூதி அரேபிய அரசாங்கத்தினதும், இரு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களதும் வழிகாட்டலானது சுற்றுலாத்துறையில் சவூதி அரேபியாவின் சாதனைக்கும், உலக சுற்றுலா துறையில் சவூதி அரேபியாவின் நிலையை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளது என்று கூறினார்.

பயண விசா ஒழுங்கு முறைகள், விளம்பரப் பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் பன்முகத்தன்மை ஆகியவையும் இந்த சாதனைகளுக்கான பெரும் காரணங்களாக அமைந்தன எனவும் அவர் குறிப்பிட்டார்.

சவூதி அரேபியாவை உலகளாவிய சுற்றுலா மையமாக மாற்றும் நோக்கில், பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த அனைத்து தரப்பினருடனும் அமைச்சு தனது நல்லுறவை புதுப்பித்துக் கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF) வெளியிடப்பட்ட சுற்றுலா மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டில் (வுவுனுஐ) புதிய சாதனையை சவூதி அரேபியா நிகழ்த்தியுள்ளது, இது 2019 ஆம் ஆண்டை விட பத்து தரவரிசைகள் முன்னேறி உலக அளவில் 33வது இடத்தைப் பிடித்துள்ளது.

தொடர் 02

# பிரபாவின் இறுதி நிமிடம்...!!



ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்



மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த



பிரிகேடியர் பிரசன்ன சில்வா



லெப்டினன். ஐ.பி.ஐயரத்ன

## மேலிருந்து குண்டு மழை பொழிய... முன்னேறிச் செல்லும் படையணி..

8-MAN TEAM அது...

அவர்கள்மீதும் கடும் தாக்குதல். 500 மீற்றர்கூட நகர முடியவில்லை.

படகில் இருந்து NAVAL GUN மூலமாகவும் தாக்குதல்.

பலமான ஆயுதம் அது. கடலில் சண்டை போடும் ஆயுதம்.

வெடித்துச் சிதறுகின்றன பனை மரங்கள். அதன் புல்லட்கள் பட்டு...

தலை தூக்க முடியவில்லை படையினரால்...

தூக்கினால் தலை சரி. பொறுக்கி எடுக்கவும் முடியாது. தூள் தூளாகிவிடும்.

தூளாகின்றன பனை மரங்கள். கண்ணெதிரே...

மறுபுறம், SNIPER தாக்குதல்.குறி வைத்து அடிக்கிறார்கள் தலைக்கு...

இந்த நிலையில் எப்படி நகருவது...???

அதற்காக பின்வாங்க முடியுமா...!!!

நாடுகிறார்கள் கபீரின் உதவியை. அதுதான் ஒரே வழி.

வருகிறது கபீர்.அள்ளி வீசுகிறது குண்டுகளைத் தாறுமாறாக...

தடுமாறுகிறார்கள் புலிகள்.

அவர்கள் பின்வாங்க...மெல்ல நகர்கிறது படை.ஜயரத்னவின் அணி இப்போது..

நுழைந்துவிட்டது அந்த அணி.

மீட்கிறார்கள் இறந்த உடல்களை.. காயமடைந்தவர்களை..

அனுப்புகிறார்கள் அவர்களை பின்னுக்கு.

அங்கிருந்து மேலும் முன்னேறுகிறது ஜயரத்னவின் அணி.

அடுத்து வட்டுவாகல் பாலம்.

முல்லைத்தீவு-பரந்தன் பாதையில் உள்ள நந்திக்கடல் வாவி இடையிலான பாலம் அது.

அதைத் தகர்த்துவிட்டார்கள் புலிகள்.குண்டு வைத்து...

யுத்த சூனிய வலயத்துக்குள் நுழையும் நுழைவாயில் அந்தப் பாலம்தாம்.

இப்போது முன்நகர்வது கஷ்டம். பாதை இல்லை.

ஆனால்,தெரிகிறது இன்னொரு வழி.

அது ஒரு பெரிய மண்மேடு. வாவியையும் கடலையும் பிரிக்கும் மண்மேடு.

அதன் மேலால் நடந்து செல்லலாம்.

ஆனால், அது ஆபத்தானது.

புலிகள் மறைந்திருந்து கண்காணிக்கிறார்கள்.சுடுவது இலகு.

எப்படி நகர்வது...???

முதலில் பாதுகாப்பு அரண் ஒன்று தேவை.

வகுக்கிறார்கள் திட்டம் ஒன்றை.

பங்கரை அமைப்பது. அதில் இருந்து - தாக்குதல் நடத்தி நகர்வது.

தோண்டுகிறார்கள்.

இரவு நேரங்களில் மட்டும்.

வெகு தூரத்தில் அல்ல. புலிகளின் பங்கருக்கு அருகில்...

வெறும் 50 மீற்றர்தான். இரண்டுக்கும் இடையில்...

பங்கர் தயார் இப்போது.

ஜயரத்னவின் 8-MAN TEAM அதற்குள்.அந்த பங்கருக்குள்..

இரவு 8 மணி.சண்டை ஆரம்பம்.

ஒரு மணி நேரம் கடும் தாக்குதல்.

அப்படியே நிற்கிறது.

11 மணிக்கு.மீண்டும் ஆரம்பம்.

பிறகு சற்று ஓய்வு.

இறுதியாக, ஒரு மணிக்கு.கடும் தாக்குதல். விடியும்வரை...

நெருங்கி வருகிறார்கள் புலிகள்.மிக அருகில் இப்போது...

கைக்குண்டு ஒன்றை வீசுகிறார்கள். பங்கரை நோக்கி...

வீழ்கிறது லெப்டிணனின் காலில். அவரது பூட்ஸில்.

அவரது அதிஷ்டம்.

பட்டு வீழ்கிறது நீருக்குள். நந்திக்கடல் வாவிக்குள்.

ஓரிரு வினாடிகள்தான். வெடிக்கிறது நீருக்குள் வீழ்ந்து...

சேதம் எதுவுமில்லை.சிதறிய சகதி மட்டும்தான் உடலில்....

அந்த பங்கர் வாவிக்கு அருகில்.லெப்டினன் நின்றது பங்கரின் ஓரத்தில்...வாவிக்கு அருகில்...

மயிரிழையில் தப்புகிறார் லெப்டினன்.அவர் உயிர் தப்பிய இரண்டாவது சந்தர்ப்பம் இது.

தொடர்கிறது சமர்...

புலிகளுக்குக் கடும் சேதம். பின்வாங்குகிறார்கள்.

விடிந்துவிட்டது.பார்க்கிறார்கள் எதிரே...





நெருங்கி வருகிறார்கள் புலிகள்.மிக அருகில் இப்போது... கைக்குண்டு ஒன்றை வீசுகிறார்கள். பங்கரை நோக்கி... வீழ்கிறது லெப்டிணனின் காலில்.அவரது பூட்ஸில். அவரது அதிஷ்டம். பட்டு வீழ்கிறது நீருக்குள்.நந்திக்கடல் வாவிக்குள். ஓரிரு வினாடிகள்தான்.வெடிக்கிறது நீருக்குள் வீழ்ந்து... சேதம் எதுவுமில்லை. சிதறிய சகதி மட்டும்தான் உடலில்....



மிக அருகில்தான் நின்று இருக்கிறார்கள் புலிகள்.20 மீற்றர் தூ ரம்தான்.

ஆயுதங்கள் பல அங்கு.சேதம் அதிகம்....

நெருங்க முடியவில்லை. பின்வாங்கிவிட்டார்கள். ஆயுதங்கையும் போட்டுவிட்டு...

ஆனால்,நெருங்கி வந்தது தெரியவில்லை படையினருக்கு.கடும் இருட்டு.

சத்தத்தைக் கேட்டுத்தான் தாக்கினார்கள்.

அவதானிக்கிறார்கள் காலையில்.

புலிகளின் மேலும் சில பங்கர்கள் அங்கு.சற்றுத் தள்ளி...

பகலில் நெருங்க முடியாது. அதற்குள் புலிகள்.

இரவில்தான் சாத்தியம்.

இரவாகிவிட்டது. 10 மணி இப்போது.

(தொடரும்.....)

நாட்டின் பொருளாதார நிலைமை கட்டங்கட்டமாக முன்னேறிச் செல்கிறது.இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

உங்களது கட்சி ஜனாதிபதியுடன் இணைந்தால் இந்தப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம் அல்லவா?

ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் அரசில் இணையவுள்ளார்கள் என்று சொல்லப்படுகிறதே?

வடிவேல் சுரேஷ்,சம்பிக்க ரணவக்க ஆகியோரின் செயற்பாடுகளை பார்க்கும்போது பலர் உங்களின் கூட்டமைப்பில் இருந்து விலகுவதுபோல் தெரிகிறதே?

ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் பல வேட்பாளர்கள் களமிறங்குவார்கள் போல் தெரிகிறதே?

உள்ளூராட்சி சபைத் தேர்தல்,ஜனாதிபதி தேர்தல் இரண்டிலும் எதை நீங்கள் முதலில் எதிர்பார்க்கிறீர்கள்?



எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார்.சில வேளை ஜனாதிபதி தேர்தலை காட்டி காட்டி வேறு தேர்தலையும் நடத்த வாய்ப்புண்டு. காட்டுவதே கிடைக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்த ஆட்கள்தானே. ரணிலைப் பற்றி நன்றாகத் தெரியும்.



# ரணில் - சஜித் இணைவார்களா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி தலதா அத்துகோரல.அவரது முழுமையான பேட்டி இதோ.

**கேள்வி : நாட்டின் பொருளாதார நிலைமை கட்டங்கட்டமாக முன்னேறிச் செல்கிறது.இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இருந்தாலும்,நாம் எல்லோரும் மகிழ்ச்சியடையும் நிலைக்கு நாடு வரவில்லை. ஆனால்,பூரணமான நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

**கேள்வி : அது தொடர்பான ரணிலின் வேலைத்திட்டம் வெற்றியளித்துள்ளது என்று நம்புகிறீர்களா?**

பதில் : வெற்றியடைந்துள்ளது என்று சொல்ல முடியாது. சில பிரச்சினைகள் தீர்ந்தாலும் ஊழல்,மோசடிகள் நிற்கவில்லை.இது நிறுத்தப்பட வேண்டும் என்று கூறித்தான் மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இதை ஒழிப்பதற்கு ரணில் முயற்சி எடுக்கக்கூடும்.ஆனால்,அவரைச் சுற்றியுள்ளவர்களை நம்ப முடியாது.அவர்கள் ஊழல்வாதிகள்.அவர்களின் அழுத்தம் காரணமாக ஊழல்,மோசடிகளைத் தடுப்பதற்கு ரணில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கலாம்.

உண்மையில்,பொருளாதார பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி கடும் முயற்சி எடுக்கிறார்.

கடந்த காலங்களில்இருந்த பெற்றோல் வரிசை,கேஸ் வரிசை இப்போது இல்லை. அந்த வரிசைகளில் மக்கள் மரணித்த காலம் மாறிவிட்டது.

ஆனால், ஜனாதிபதி மிகுதியாயுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்னும் பயணிக்க வேண்டியுள்ளது.

**கேள்வி : உங்களது கட்சி ஜனாதிபதியுடன் இணைந்தால் இந்தப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம் அல்லவா?**

பதில் : ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து எம்மிடம் உதவி கேட்டு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறார். பிறகு அந்த அழைப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. கதவு மூடியே கிடக்கிறது.

நாட்டின் முன்னேற்றத்துக்காக நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்குதல் என்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

அரசு உதவியைக் கேட்டால் அந்த உதவியைப் பெறுவதற்கு முறைமை ஒன்று இருக்க வேண்டும்.ஆனால்,இங்கு அப்படி இல்லை.அழைப்பதோடு சரி.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் அரசில் இணையவுள்ளார்கள் என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : பி.ஹறிசன் இணைவதற்கு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் என்னால் கருத்துக் கூற முடியாது.இதுபோக ஏனைய எம்பிக்கள் இணையப் போவதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை.

கட்சியாக ஒரு முடிவை எடுத்தால் அதற்கு நாம் கட்டுப்படுவோம்.ஆனால்,கட்சியும் அப்படியொரு முடிவை எடுக்கவில்லை.

**கேள்வி : வடிவேல் சுரேஷ்,சம்பிக்க ரணவக்க ஆகியோரின் செயற்பாடுகளை பார்க்கும்போது பலர் உங்களின் கூட்டமைப்பில் இருந்து விலகுவதுபோல் தெரிகிறதே?**

பதில் : சம்பிக்க ரணவக்க எமது கட்சியில் போட்டியிட்டு எம்பியாகத் தெரிவானவர். அவருக்கு மக்கள் ஆதரவு தளம் ஒன்று இருக்கிறது என்று நினைத்து புதிய கட்சி ஒன்றைத் தொடங்கி இருக்கலாம்.

குமார் வெல்கமவும் அப்படித்தான்.அவரும் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கியுள்ளார். அவரும் எமது கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்தான்.

அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் இப்போது எம்முடன்தான் இணைந்துள்ளார்கள்.பல கட்சிகள் எம்முடன் கூட்டணியாக இணைந்துள்ளன.அப்படித்தான் இதுவும்.

வடிவேல் சுரேஷின் பிரச்சினையில் நியாயம் ஒன்று இருக்கிறது.அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணையும் வாய்ப்பு இருக்கா?**

பதில் : இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் அன்றிருந்தே இருக்கிறேன்.ஐக்கிய தேசிய கட்சியை விட்டு வரும்போதும் நான் அவ்வளவு சந்தோசமாக வரவில்லை.ஆனால்,விலகியது நியாயம் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்ட து.

ரணில் விக்ரமசிங்க 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்து வீட்டில் இருந்தபோது அவரை நான் போய் பார்த்து வந்தேன்.

அரசியல் என்பது வேறு.தனிப்பட்ட உறவு என்பது வேறு.தனிப்பட்ட உறவு இன்றும் தொடர்கிறது.

**கேள்வி :ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் பல வேட்பாளர்கள் களமிறங்குவார்கள் போல் தெரிகிறதே?**

பதில் : கட்சியின் தலைவர்தான் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும்.சஜித் பிரேமதாசாவின் பெயரை நாம் தெரிவு செய்து முடித்துவிட்டோம்.

2010 இல் எமது முன்னாள் தலைவர் ரணில் விக்ரமசிங்க சரத் பொன்சேகாவை வேட்பாளராக நிறுத்தினார்.2015இல் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெற வைத்தார்.

இனி அப்படி நடக்காது.சஜித்தே வேட்பாளர் என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது.

இல்லையென்றால் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

**கேள்வி : உள்ளூராட்சி சபைத் தேர்தல்,ஜனாதிபதி தேர்தல் இரண்டிலும் எதை நீங்கள் முதலில் எதிர்பார்க்கிறீர்கள்?**

பதில் : எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். சில வேளை ஜனாதிபதி தேர்தலை காட்டி காட்டி வேறு தேர்தலையும் நடத்த வாய்ப்புண்டு.

காட்டுவதே கிடைக்கும் என்று நாங்கள் நம்பவில்லை.நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்த ஆட்கள்தானே. ரணிலைப் பற்றி நன்றாகத் தெரியும்.

எப்படியும் உரிய நேரத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் வரும்.அதற்கு முன் வேறு தேர்தல் வருவதற்கே வாய்ப்புகள் அதிகம்.-என்றார்.

***

# இது தளபதியின் உத்தரவு

வயம்ப ஆளுநர் வசந்த கருணாகொடவை ஆளுநர் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி காரியாலயத்தில் இருந்து அவருக்கு கடிதம் சென்றபோது அவர் இருந்தது மக்கள் சந்திப்பில்.

கடித்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.முழுமையாக மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பார்த்துவிட்டு விலகும் முடிவை எடுத்தார்.

இதைக் கேள்விப்பட்ட ஆளுநர் அலுவலக அதிகாரிகள் கருணாகொடவைத் தொடர்புகொண்டு பதவியில் நீடிப்பதற்காக சில ஐடியாக்களை வழங்கினர்.

“நான் கடற்படைத் தளபதி.எனது தளபதி இடும் கட்டளைக்கு அடிபணிந்துதான் பழக்கம். சவால் விட்டு அல்ல.ஆகவே,ஜனாதிபதியின் உத்தரவை ஏற்று பதவி விலகுகிறேன்““ என்று அவர்களுக்கு பதில் வழங்கினார்.

இந்த செய்தி கேட்டு முதலில் மகிழ்ச்சியடைந்தவர் குருநாகல் முன்னாள் மேயர் துசார சஞ்சீவ.

அவர் அப்போது இருந்தது துபாயில்.உடனடியாக அவரது ஆதரவாளர் ஒருவரைத் தொடர்புகொண்டு இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக நகரில் பட்டாசு சுட்டுமாறு கூறினார்.






# அது உங்களுக்கு வேண்டாம்!

மஹிந்த பிரதமராகப் போகிறார் என்ற செய்தி நாமல் ராஜபக்சவின் காதில் எட்டியது.

இதுபற்றி விசாரிப்பதற்காக நாமல் மஹிந்தவைத் தொடர்பு கொண்டார்.

தயவு செய்து அதற்கு முயற்சிக்க வேண்டாம்.இனி அது உங்களுக்கு வேண்டாம். கௌரவமாக இருங்கள் என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

கடந்த வருடம் அவர் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்காக அப்போதைய ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஸ பல அழுத்தங்களை கொடுத்து வந்தார்.



இறுதியாக மஹிந்தவின் இரு மகன்களான நாமலையும் ரோஹிதவையும் அழைத்து அவர்களின் ஊடாகத்தான் கோத்தா மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுத்தார்.

மஹிந்த விலக வேண்டும் என்ற அழுத்தத்தை மஹிந்தவுக்கு கொடுத்தனர்.அதை மஹிந்த ஏற்றிருந்தார்.

ஆனால்,இடையில் புகுந்து குழப்பியது ஜோன்சன் பெர் னாண்டோ,சனத் நிசாந்த போன்றவர்களே.

இதனைத் தொடர்ந்து மஹிந்த பிரதமர் பதவியை ஏற்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகிறார் நாமல்.

இப்போதும் அதே நிலைப்பாட்டில்தான்...

# ரவி வைத்த ஆப்பு

மூன்று மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் மூவர் நியைக்கப்பட்டுள்ளார்கள் அல்லவா. அவர்களுள் ஒருவராக வர இருந்தவர் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டா.

அவர் ஆளுநராக முடியாமல் போனமைக்குக் காரணம் ரவி கருணாநாயக்கதானாம்.

ஏன் தெரியுமா?

ரங்கே ஆளுநரானால் தனக்கு ரங்கேவின் செயலாளர் பதவியைத் தர வேண்டும் என்று நின்றாராம் ரவி.ஒருவருக்கு இரண்டு பதவிகள் கொடுப்பது சரி இல்லை என்று கூறி.

ரணிலுக்குத் தேவை ரங்கேபண்டா செயலாளராக இருப்பது.

இதனால் ரங்கேவை அழைத்து விடயத்தை விளக்கிய ஜனாதிபதி ““நீங்கள் செயலாளராக இருக்க வேண்டும் என்று கூறினாராம்.”

நிலைமையைப் புரிந்துகொண்ட ரங்கேபண்டா சரி என்று ஒத்துக்கொண்டு ஆளுநர் கணவைக் கைவிட்டுள்ளாராம்.





# மஹிந்த பிரதமரா? கோபத்தில் ரணில்

மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியை இழந்து ஒரு வருடம் நிறைவடைந்துவிட்டது. அவர் மீண்டும் பிரதமராகப் போகிறார் என்று கதை பரவி வருகிறது.

அவர் பதவி விலகிய தினமான 9 ஆம் திகதி மீண்டும் பதவி ஏற்பார் என்று கூறப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதி காரியாலய அதிகாரிகள் ஜனாதிபதியிடம் விசாரித்தனர். அவருக்கு கோபம் வந்துவிட்டது.

இதை விட்டுவிட்டு இருக்கின்ற வேலையைப் போய் பாருங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார்.



# பசிலுக்கு வெற்றி

கடந்த வாரம் புதிய ஆளு.நர்கள் மூவர் நியமிக்கப்பட்டமை தெரிந்ததே.அவர்கள் மூவரும் பசில் ராஜபக்சவின் கோரிக்கைக்கு அமைய நியமிக்கப்பட்டவர்களாம்.

ஏற்கனவே 10 பேரை அமைச்சர்களாக நியமிக்குமாறு பசில் ஜனாதிபதியிடம் பட்டியல் ஒன்றைக் கொடுத்து பல மாதங்கள் ஆகின்றன.அதற்கு ஜனாதிபதியிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.

இந்த நிலையில்தான்,ஆளுநர்களையாவது நியமித்துத் தருமாறு பசில் வழங்கிய பெயர் பட்டியலை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு அந்த நியமனத்தை வழங்கினார் என்று தகவல்கள் கூறுகின்றன.


# மஹிந்தவின் வீடு தேடி...

*இந்த மாதம் 18 ஆம் திகதி போர் முடிந்து 14 வருடங்கள் ஆகின்றன. அந்தப் போர் வெற்றிக்கு காரணமாக இருந்த- ஜனாதிபதியாக இருந்து உத்தரவிட்ட மஹிந்த ராஜபக்சவுக்கு அன்றைய தினம் வாழ்த்துக்கள் குவிந்தன.*

*பல அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள்,எம்பிக்கள் என பலர் மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு படை எடுத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.*

*18 மற்றும் 19 ஆகிய தினங்களில் மஹிந்தவின் வீடு இவர்களால்- இவ்வாறு வாழ்த்துச் சொல்ல வந்ததால் நிரம்பி வழிந்ததாம்.*





# விடுமுறை இல்லாத ஜனாதிபதி

*ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி ஒரு வருடமாகிறது.அந்த ஒரு வருடத்தில் அவர் விடுமுறை எடுத்ததில்லையாம்.தொடர்ந்தும் அப்படித்தானாம்.*

*விடுமுறை நாட்களிலும் அலுவலகம் வந்து பணிபுரிகிறாராம். அப்படி வந்தாலும் இரவாகித்தான் அலுவலகத்தை விட்டுச் செல்கிறாராம். இதன் காரணமாகத்தான் பொருளாதார பிரச்சினையை ஓரளவு தீர்க்க முடிந்துள்ளது என்கிறார்கள் அவருடன் இருப்பவர்கள்.*

# பலவீனமான முஸ்லிம் தலைமைகள்



தங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எல்லோரும் நடாளுமன்றம் செல்ல முடியாது என்பதால்தான் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள்.

அவர்கள் அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிறார்களா என்பது கேள்விக்குறிதான்.

இந்த நாட்டில் உள்ள அணைத்து மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன.எல்லா இன மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன.

குறிப்பாக,வடக்கு-கிழக்கு தமிழ்-முஸ்லிம் மக்களின் பிரச்சினை என்பது தெற்கு மக்களின் பிரச்சினைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. அது போரினால் உருவாக்கப்பட்ட பிரச்சினை.

இந்தப் போர் காரணமாக தமிழ் மக்கள் உயிர்களை இழந்தார்கள். நிலங்களை இழந்தார்கள்,உடமைகளை இழந்தார்கள்.காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

அந்தப் பிரச்சினைகள் அத்தனைக்கும் தீர்வை முன்வைப்பதற்காக அவர்கள் அரசியல் தீர்வொன்றை வேண்டி நிற்கிறார்கள்.அது நியாயம்.

அதேபோல்தான் முஸ்லிம் மக்களும். அவர்களும் கொல்லப்பட்டார்கள்,கடத்தப்பட டார்.நிலங்கள் பறிக்கப்பட்டன,சொத்துக்கள் பறிக்கப்பட்டன.இப்படி பல கொடுமைகள்.

இவற்றைச் செய்தவர்கள் புலிகள். புலிகள் இப்போது இல்லாவிட்டாலும் அச்சொத்துக்கள் அவர்களால் பறிக்கப்பட்ட சொத்துக்கள்,நிலங்கள் எவையும் முஸ்லிம்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

புலிகளின் ஆதரவாளர்கள் அவற்றை இப்போதும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டபோது அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறித்து கால் நடையாகவே அனுப்பி வைத்தார்கள்.

அதாவது,சொப்பிங்க் பேக்கில் உடுப்புகளை மாத்திரம் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.பெண்கள் அணிந்திருந்த நகைகளைக்கூட உருவிவிட்டுதான் அனுப்பினார்கள்.

அப்படி வந்த முஸ்லிம்கள் புத்தளம் போன்ற பகுதிகளில் இன்னும் அகதிகளாகவே உள்ளனர்.அவர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை .அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட சொத்துக்கள் மீளக்கொடுக்கப்படவில்லை.

அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முஸ்லிம்களும் அரசியல் தீர்வுக்கு உரித்துடையவர்கள்.

ஆனால்,இப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளார்.தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசி வருகிறார்.

இந்த இடத்தில் முஸ்லிம் கட்சிகள் இல்லை.ஏன் அது? இது யாருடைய தவறு? ஜனாதிபதி முஸ்லிம்களை புறக்கணிக்கிறாரா அல்லது முஸ்லிம் தலைமைகள் அஜாக்கிரதையாக இருக்கிறார்களா?

ஜனாதிபதி கணக்கில் எடுக்காமல் இருக்கிறார் என்பதற்காக முஸ்லிம் தலைமைகளும் அப்படியே இருந்திடலாமா?

இதுவொரு சந்தர்ப்பம்.முஸ்லிம்களுக்கும் அதே பிரச்சினை உள்ளது என்று காட்டுவதற்கு-அந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இதை முஸ்லிம் அரசியல் தலைமைகள் வாய்ப்பாக மாற்ற வேண்டும்.

பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்தால் செல்வோம் என்பது இந்த விடயத்தில் பொருந்தாது.இது மக்களின் பிரச்சினை. அரசியல் தலைமைகள்தான் அழைப்பை கேட்டுப் பெற வேண்டும்.அழைக்கட்டும் என்று இருந்தால் காரியம் நடக்காது.

**வடக்கில் இருந்து முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டபோது அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறித்து கால் நடையாகவே அனுப்பி வைத்தார்கள். சொப்பிங் பேக்கில் உடுப்புகளை மாத்திரம் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.பெண்கள் அணிந்திருந்த நகைகளைக்கூட உருவிவிட்டுதான் அனுப்பினார்கள்.**

# அலி சப்ரி விவகாரம் : முன்னுதாரணமான ஜேவிபியின் தண்டனை





துபாயில் இருந்து தங்கம் கடத்தி வந்த நிலையில் விமான நிலையத்தில் சிக்கிய அலி சப்ரி எம்பியைப்பற்றிதான் இன்று அரசியல் அரங்கில் பேச்சு.

அவர் இந்தக் குற்றத்தைப் புரிந்தமைக்காக எம்பி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோசம் ஆளும் மற்றும் எதிர்கட்சிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சிக்கும்வரை எல்லோரும் உத்தமர்கள்தான்.

அரசியலுக்கு வரத் துடிப்பது மக்கள் சேவைக்கு அல்ல .பணம் சம்பாதிப்பதற்காகத்தான் என்பது அலி சப்ரி எம்பியின் விவகாரத்தின் மூலம் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

துவிச்சக்கர வண்டியோடு உள்ளூராட்சி சபைக்கு வருகின்ற ஓர் அரசியல்வாதி அந்த சபையின் ஆயுட்காலம் முடியும்போது காரில் செல்வத்தையும் மாடி வீடு கட்டி இருப்பதையும் சொத்துக்கள் வாங்கி குவிப்பதையும் காண்கிறோம்.

நாடாளுமன்றத்துக்கு வரும் எம்பி அதைவிட அதிகம்.

வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்கிக் குவித்து அங்கே பினாமிகளின் பெயர்களில் வர்த்தகத்தை செய்து வருகின்றனர்.

பல்வேறு வகையான யுக்திகளை பாவித்து பணம் சம்பாதிக்கிறார்கள்சொத்துக்களை வாங்கிக் குவிக்கிறார்கள்.

அவர்களுள் ஒரு சில அரசியல்வாதிகள்தான் விதிவிலக்கு.முடியுமானவரை மக்களுக்கு சேவை செய்கிறார்கள்.கையில் ஒன்றுமே இல்லாமல் ஓய்வு பெறுகிறார்கள்.

அப்படியானவர்கள் ஒரு சிலர்தான்.

அப்படியான ஒரு கட்சியாக தற்போதைக்கு நாம் காண்பது ஜேவிபியைத்தான்.

தனது கட்சி உறுப்பினர்கள் ஊழல்,மோசடிகளில் ஈடுபட்டால் அதைத் தண்டிக்கும் கட்சி இங்கு கிடையவே கிடையாது.

ஜேவிபி அதற்கு விதிவிலக்கு என்றே சொல்ல வேண்டும்.

2004 ஆம் ஆண்டு 39 ஆசனங்களுடன் பலமான ஒரு கட்சியாக நாடாளுமன்றில் வீற்றிருந்தது ஜேவிபி.

அந்த நிலையில் அக்கட்சியின் எம்பியான கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த அனுருத்த பொல்கம்பள என்பவர் ஒரு மோசடிச் செயலை செய்து சிக்கிவிட்டார்.

அவர் ஜப்பான் சென்றார்.அப்படி செல்லும்போது செயலாளர் என்று கூறி தன்னுடன் ஒருவரை அழைத்துச் சென்று ஜப்பானில் இறக்கிவிட்டு வந்துவிட்டார்.அதற்காக அவரிடம் கணிசமான தொகை ஒன்றைப் பெற்றுக்கொண்டார்.

அவர் நாட்டுக்கு வரும் முன்பே ஜேவிபிக்கு இந்தத் தகவல் தெரிந்துவிட்டது.

அவர் விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் அங்கு காத்துநின்ற ஜேவிபியினர் அவரை அப்படியே கட்சியின் தலைமையகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அவர் உண்மையை ஒத்துக்கொண்டார்.

உடனே அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

எம்பி பதவியில் இருந்து விலகுவதாக அவரிடம் இருந்து இராஜினாமா கடிதம் வாங்கப்பட்டது. அத்தோடு கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டார்.

இப்படிப்பட்ட தண்டனையை-அதுவும் உடனடி தண்டனையை எம்மால் இப்போது எந்த கட்சிக்குள்ளும் பார்க்க முடியுமா?

இந்தப் பிரச்சினை வெளி உலகிற்கு தெரிய வருவதற்கு முன்பே சூட்டோடு சூடாக தண்டனை வழங்கி முடிக்கப்பட்டது.

அதன்பின்தான் எல்லோருக்கும் தெரிய வந்தது.ஆனால்,ஜேவிபியின் அரசியல் எதிரிகள் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

இப்படி குற்றம் புரிந்தவர்க்கு தண்டனை வழங்கி முன்னுதாரணமாக திகழ்ந்தது ஜேவிபி.இப்படி ஏனைய கட்சிகளும் தண்டனை வழங்க முன்வந்தால் ஊழல்,மோசடிகளை முற்றாக குறைத்துவிடலாம்.

அரசியலுக்கு போனால் பணம் சம்பாதிக்க முடியாது என்ற நிலை உருவாகும்.அப்போது மக்கள் சேவை செய்ய விரும்புகின்றவர்கள் மாத்திரமே அரசியலுக்கு வருவார்கள்.

# மீண்டும் கிளம்பும் பூதம்



இந்த நாட்டுக்குப் பிடித்த சாபமே இனவாதம்தான். அந்த இனவாதம் போரின் வடிவில் 30 வருடங்களாக இந்த நாட்டை - உயிர்களை - பொருளாதாரத்தை அழித்ததோடு முடிந்துவிடவில்லை.அதன் பின்பும் தொடர்கிறது.

போர் வெற்றியை வைத்து தனது ராஜ்யத்தை மஹிந்த ராஜபக்ஸ கட்டியெழுப்பியபோதும் அது சில வருடங்களிலேயே ஆட்டங்காணத் தொடங்கியது.போர் வெற்றியை மக்கள் மறக்கத் தொடங்கினர்.

இதனால் ஆட்சியை ஸ்தீரப்படுத்தும் துருப்புச் சீட்டாக அவர்கள் தெரிவு செய்தது முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை.

போர் முடிந்த கையோடு அந்த இனவாத செயற்பாட்டுக்கான அடித்தளம் இடப்பட்டது.போர் வெற்றி நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்காது என்று மஹிந்த தரப்புக்குத் தெரியும்.

அந்த போர் வெற்றி மறந்துகொண்டு வரும்போது அந்த இடத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைப் புகுத்தி ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதுதான் திட்டம்.

2009 இல் போர் முடிந்ததும் அந்த வெற்றியைக் கொண்டு 2010 ஜனாதிபதி தேர்தலையும் அதே வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலையும்தான் மஹிந்த தரப்பால் வெற்றிகொள்ள முடிந்தது.

அடுத்து 2015 இல் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு அந்த வெற்றி உதவாது என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர்.

இதனால் அவர்கள் பௌத்த தேரர்கள் சிலரை வைத்து வடிவமைத்து வைத்திருந்த முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை களமிறக்க முடிவு செய்தனர்.

2012,2013 காலப் பகுதியில் இருந்து அந்த இனவாதம் களமிறங்கத் தொடங்கியது.

2012 இல் தம்புள்ளை பள்ளிவாசலை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தினார்கள் அந்தத் தேரர்கள்.

மறுபுறம், பொதுபல சேனா, ராவண பலய ,சின்ஹல ராவய போன்ற இனவாத தேரர் அமைப்புகளும் களமிறங்கி முஸ்லிகளுக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்ளத் தொடங்கின.

அதில் முன்னணியில் நின்ற அமைப்பு பொதுபல சேனா.அதன் பொது செயலாளர் ஞானசார தேரர் கடும் தீவிரமாக செயற்படத் தொடங்கினார்.

அவர்கள் முதலில் கையில் எடுத்தது ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டத்தை.அதை வைத்தே நாடு பூராகவும் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்கத் தொடங்கினர்.

அவர்கள் ஹலால் சான்றிதழை மாத்திரம் எதிர்க்கவில்லை. ஒட்டுமொத்த இஸ்லாத்தையும் எதிர்த்தனர்.

இஸ்லாம் என்பது இந்த நாட்டுக்கு எதிரானதுசிங்கள மக்களை அழிக்கக்கூடியது என்றெல்லாம் பிரசாரம் செய்தனர்.

இறுதியில் ஹலால் சான்றிதழ் தொடர்பில் அதை வழங்கி வந்த உலமா சபை ஒரு முடிவுக்கு வந்தது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஹலால் சான்றிதழை வழங்குவதில்லை.ஏற்றுமதி பொருட்களுக்கும் இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாவாசிகளின் உணவுகளுக்கும் மாத்திரமே ஹலால் சான்றிதழை வழங்குதல் என்பதே அந்த முடிவு.

பொதுபலசேனாவும் உலமா சபையும் சேர்ந்தே இந்த முடிவை எடுத்தது.

அதன் பின்பும் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத பிரசாரம் முடிவுக்கு வரவில்லை.அதனைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்களின் ஆடைமீது கை வைத்தார்கள்.

அதாவது,முகத்தை மறைத்து அணியும் புர்காவுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கூறி போராட்டத்தை மேலும் முன்னெடுத்தனர்.

சில இடங்களில் அபாயா அணிவதைக்கூட எதிர்த்தனர்.

இவ்வாறு சென்று அழுத்கமை கலவரத்தை ஏற்படுத்தி முஸ்லிம்களை கொலை செய்து அவர்களின் வீடுகள்-வாகனங்கள்-வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட சொத்துக்களை எரித்தனர்.

2015 ஆம் ஆண்டு தேர்தலை இலக்கு வைத்து இவற்றையெல்லாம் செய்தபோதும்.அவை மஹிந்தவுக்கு எதிராகவே திரும்பின.மஹிந்த தோல்வியடைந்தார்.

இருந்தும், அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கும்வரை அந்த இனவாத பிரசாரம் ஓயவில்லை. ஞானசாரவும் ஓயவில்லை.

2019 இல் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதும் அதை சரியாகப் பயன்படுத்தி மீண்டும் பல இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றினர்.

இதில் முன்னின்று செயற்பட்ட தேரர்களுள் முதன்மையானவர் ஞானசார தேரர்.



2019 இல் ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ஸ ஒரு வருடத்திலேயே எல்லாவற்றையும் நாசமாக்கியதும் - அதற்கு எதிராக மக்கள் போராட்த் தொடங்கியதும் ஓடிப் போய் ஒளிந்துகொண்டார் ஞானசார. இப்போதுதான் வெளியே எட்டிப்பார்க்கத் தொடங்கியுள்ளார்.

அந்த கிஸ்தவ அமைப்பின் போதகர் ஜெராம் சர்சைக்குரிய கருத்தைத் தெரிவிக்க அவருக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் சாக்கில் இப்போது வெளியாகியுள்ளார்.

மீண்டும் கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புகள் என்றும் -முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் என்றும் கூறிக்கொண்டு அவற்றைத் தடை செய்ய வேண்டும் என்று அவரது பாணியில் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளார்.

அடங்கிக் கிடந்த பூதம் இப்போது வெளியே கிளம்பியுள்ளது. இவரது பேச்சில் மயங்கி - இனவாதத்துக்குள் சிக்கி கோத்தாவின் ஆட்சியைக் கொண்டு வந்ததால் இந்த நாடு எதிர்கொண்ட பிரச்சினைகள் என்னெவென்பது இப்போது சிங்கள மக்களுக்குத் தெளிவாகியுள்ளது.

அந்த தெளிவு தொடர்ந்தும் தெளிவாக இருக்கும்வரைதான் இனவாதத்தால் நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதார அழிவு மீண்டும் ஏற்படாமல் இருக்கும் என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும்.

**அடங்கிக் கிடந்த பூதம் இப்போது வெளியே கிளம்பியுள்ளது. இவரது பேச்சில் மயங்கி - இனவாதத்துக்குள் சிக்கி கோத்தாவின் ஆட்சியைக் கொண்டு வந்ததால் இந்த நாடு எதிர்கொண்ட பிரச்சினைகள் என்னெவென்பது இப்போது சிங்கள மக்களுக்குத் தெளிவாகியுள்ளது. அந்தத் தெளிவு தொடர்ந்தும் தெளிவாக இருக்கும்வரைதான் இனவாதத்தால் நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதார அழிவு மீண்டும் ஏற்படாமல் இருக்கும் என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும்.**

# இலங்கையில் முன்னிலை வகிக்கும் eChannelling

இலங்கையின் மாபெரும் வைத்திய முன்பதிவு மற்றும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகள் வழங்குநரான eChannelling PLC, 2022 நிதியாண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது.

இலங்கையர்களின் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகளிலும், சுகாதாரப் பராமரிப்புத் துறையிலும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் இலக்குடன் இயங்கும் eChannelling, தொழில்நுட்பம் மற்றும் திறமை ஆகியவற்றை ஒன்றிணைப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அதனை உறுதி செய்யும் வகையில் வருமான வளர்ச்சி, தந்திரோபாய பங்காண்மைகளில் அதிகரிப்பு மற்றும் சகல பங்காளர்களுக்கும் பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கும் திறன்களில் விருத்தியை ஏற்படுத்துவதில்


SLT குழும தவிசாளர் – ரொஹான் பெர்னான்டோ

முக்கிய பங்காற்றியிருந்தது.

2022 ஆம் ஆண்டிலும், அதற்கு அப்பாலும் வளர்ச்சியை எய்தியுள்ள eChannelling, 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. மொத்த வருமானம் ரூ. 221.5 மில்லியனாக பதிவாகியிருந்தது.

இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15% வளர்ச்சியாகும். பெரும்பொருளாதாரச் சவால்கள் நிலவிய காலப்பகுதியிலும் இந்த சிறந்த பெறுபேறுகளை எய்தியிருந்தமை விசேட அம்சமாகும். நிலைபேறான, இலாபகரமான வியாபாரம், ஆகியவற்றை வெளிப்படுத்தி தேறிய இலாபம் ரூ. 65.5 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23% அதிகரிப்பாகும்.

# DIMOவுக்கு வெள்ளி விருது



சமீபத்தில் நடைபெற்ற 2021-2022 ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகளில், வாகன சேவை பிரிவில் DIMO நிறுவனம் வெள்ளி விருதை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பிற்காக வெலிவேரியவில் உள்ள DIMO Logistics Centre இற்கு இவ்விருது வழங்கப்பட்டது.

DIMO Logistics Centre ஆனது சுற்றுச்சூழல் தொடர்பான தாக்கங்களை குறைக்க பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுகிறது.

சூரிய மின்கலத் தொகுதி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை பயன்படுத்துதல், நீர் சுத்திகரிப்பு தொகுதி மற்றும் மழைநீர் சேகரிப்பு தொகுதி ஆகியன, DIMO வெலிவேரிய மையத்தினால் பின்பற்றப்படும் ஒரு சில சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைககளாகும்.

சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA) ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பங்களிப்பிற்காக பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருது விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

உள்நாட்டு வாகனத் துறையில் முன்னோடி எனும் வகையில், ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகளில் DIMO பெற்றுள்ள வெற்றியானது, சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மைக்கான அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மேலும் வலியுறுத்துகிறது.




# பாடசாலைகள் மட்ட சுவரொட்டி ஓவியப் போட்டி



நெஸ்லே லங்கா நிறுவனம், கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றுடன் இணைந்து, தனது பாடசாலை கழிவு முகாமைத்துவ திட்டத்தின் இரண்டாம் கட்டமாக அகில இலங்கை பாடசாலைகள் மட்ட சுவரொட்டி ஓவியப் போட்டியை ஆரம்பித்துள்ளது.

“பூமிக்கு நல்லது செய்வோம் - ஒரு ஓவிய வடிவம்) எனப் பெயரிடப்பட்ட இந்தப் போட்டி, இளம் வயதிலேயே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், பாடசாலை மாணவர்களிடையே கழிவுகளை பொறுப்புணர்வுமிக்க வழியில் அகற்றுவதன் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

வலயம், மாகாணம் மற்றும் அகில இலங்கை என மூன்று சுற்றுகளாக நடத்த திட்டமிடப்பட்டதுடன், இறுதிச் சுற்றானது உலக சுற்றுச்சூழல் தினத்தை இலக்காகக் கொண்டு இந்த ஆண்டு ஜூன் மாதம் நடத்தப்படும்.

# SLT-MOBITEL இன் புதிய நகர்வு




தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, Prime Lands Residencies PLC உடன் அண்மையில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அதனூடாக, கொழும்பு 7, வோட் பிளேசில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதி சொகுசு வதிவிடத் தொகுதியான ‘The Grand’ இல் SLT-MOBITEL Fibre இணைப்ப வசதியினூடாக பரிபூரண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க SLT-MOBITEL முன்வந்துள்ளது.

SLT இன் பிரதம பிராந்திய வியாபார அதிகாரி இமந்த விஜேகோன் மற்றும் Prime Lands Residencies PLC ஆகியவற்றின் முகாமைத்துவ பணிப்பாளர் மஞ்சுள வீரக்கொடி ஆகியோரிடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் SLT-MOBITEL மற்றும் Prime Lands Residencies PLC ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள Grand தொடர்மனைகளினூடாக உயர் சௌகரியம் மற்றும் பிரத்தியேகத்தன்மை போன்றன வழங்கப்படுவதுடன், வாழ்வதற்கு பொருத்தமான உயர்ந்த சொகுசான நியமங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. 37 மாடிகளைக் கொண்டதுடன், 160 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளது. Grand இனால் 50,000 சதுர அடிப் பரப்பளவு இடவசதியைக் கொண்டுள்ளதுடன், சில மாடிகளில் ஓய்வுநேர மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்காக உள்ளக மற்றும் வெளியக வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பங்காண்மை தொடர்பில் மஞ்சுள வீரக்கொடி கருத்துத் தெரிவிக்கையில், “Grand என்பது வசிப்போருக்கு மிகச் சிறப்பான வாழ்க்கை முறை அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளமையினூடாக, உயர் தரம் வாய்ந்த ஃபைபர் இணைப்புகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதிலும், அதனூடாக smart home மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்பதிலும் முழு நம்பிக்கையை கொண்டுள்ளோம்.” என்றார்.

# Browns உடன் இணையும் HNB




விவசாயத்துறை தற்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியிலும் அண்மைய முயற்சிகளுக்கு ஏற்ப, இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கிகளில் ஒன்றான HNB, நாட்டின் விவசாய இயந்திரங்களின் முன்னோடியான டீசழறெ விவசாயத் துறையுடன் மீண்டும் கைகோர்த்துள்ளது.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த சஞ்சய் விஜேமான்ன, உடீே வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர வங்கிகளின் பிரதிப் பொது முகாமையாளர், "கடந்த சில வருடங்களாக இலங்கையில் விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

இது விவசாயத் தொழில், தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி சந்தை ஆகியவற்றில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்நிலைமையை நன்கு புரிந்து கொண்டு நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர எம்மை அர்ப்பணித்தோம். அதன்படி, விவசாயிகளுக்கு பிரீமியம் டிராக்டர்கள் மற்றும் அறுவடை இயந்திரங்களை எளிதாக வாங்குவதற்கு Browns Agriculture உடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

"நாங்கள் வழங்கிய தீர்வுகள் இலங்கையில் விவசாயத் தொழில்துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு பங்களிப்பதில் நாங்கள் எங்கள் பங்கை ஆற்ற உறுதிபூண்டுள்ளோம்." என தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், விவசாய இயந்திரங்களின் சேவை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு செலவுகளை சந்திப்பது விவசாயிகளுக்கு சவாலாக உள்ளது. HNB மற்றும் டீசழறளை யுபசைரடவரசந உடனான இந்த கூட்டிணைவின் கீழ், TAFE இப்போது டிராக்டர் வாங்குதல்களுக்கு 2 வருட (அல்லது 2000 மணிநேரம்) உத்தரவாதத்தை வழங்குகிறது.

மேலும், இந்த HNB/Browns லீசிங் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு டிராக்டரை வாங்கும் விவசாயிகளுக்கு கூலிக் கட்டணங்கள் இன்றி வீட்டுக்கே வந்து நான்கு தடவை உதிரிப்பாகங்களை சரிபார்க்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# Hemas ஆல் உலக மனநலிவு தினம் அனுஷ்டிப்பு



உலக மனநலிவு தினத்தை "இடமளிப்போம்" (சமூகத்தில் இடமளிப்போம்) எனும் தொனிப் பொருளின் கீழ் Hemas Outreach மையம் அனுஷ்டித்திருந்தது. ராகமயில் அமைந்துள்ள AYATI நிலையத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. 'Eka Se Salakamu' சமூக அமைப்புடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த அமைப்பினால், மனநலிவுற்ற சிறுவர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு கண்ணியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கான வலுவூட்டல் மேற்கொள்ளப்படுகின்றது.

எந்தப் பிள்ளையும் ஓரங்கட்டப்படாமல், அனைவருக்கும் உள்ளடக்கமான உலகை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஹேமாஸ் குழுமத்தின் முயற்சி இதனூடாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இலங்கையில், மனநலிவு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள பெருமளவான சிறுவர்கள் மற்றும் குடும்பத்தார், சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுவதால், பொது மக்களுக்கு இவர்களின் ஆற்றல்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் போகின்றது.

சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதனூடாக, மனநலிவுக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் சமூகத்துடன் ஒன்றிணைக்க முடியும் என்பதிலும், தேசத்துக்கு பயனுள்ள பங்களிப்பு வழங்குநர்களாக அவர்களையும் திகழச் செய்ய முடியும் என்பதில் Hemas Outreach மையம் நம்பிக்கை கொண்டுள்ளது.

விழிப்புணர்வை ஏற்படுத்தல், மனநலிவுக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களின் சிறந்த சாதனைகளை வெளிக் கொணரல் போன்றன இந்த விசேட நிகழ்வில் உள்ளடங்கியிருந்தன.



# Cinec Campus இன் சர்வதேச ஹோட்டல் பாடசாலை

இலங்கையின் முதன்மையானதும் விசாலமானதுமான சமுத்திர பொறியியல் கற்கை நிறுவனமான Cinec Campus அதன் சர்வதேச ஹோட்டல் பாடசாலையை (Cinec–HIS)அறிமுகப்படுத்தியுள்ளது.

Cinec சர்வதேச ஹோட்டல் பாடசாலை அவுஸ்திரேலியாவின் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான தனித்துவமானதும் பழமையானதுமான பல்கலைக்கழகமான Modul University உடன் இணைந்து விருந்தோம்பல் தொடர்பான சான்றிதழ் பாடநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது.

தொழில்முறை சமையல் (Professional Cookery) பேஸ்ரி மற்றும் பேக்கரி (Pastry and Bakery), உணவகச் சேவை (Food and Beverage), விருந்தினர் வரவேற்பு



(Hotel Front Office), ஹோட்டல் பராமரிப்பு (Hotel Housekeeping) ஆகிய மேற்படி பாடநெறிகள் தேசிய தொழிற்பயிற்சி தகைமைக்கு (NVQ) ஏற்ப வடிவ வகைகப்பட்டுள்ளன.

இப் பாடநெறிகளின் தனித்துவத்தன்மை யாதெனில், சமுத்திரச் சுற்றுலா சேவைக்கு (Cruise Tourism) தேவையான அடிப்படை பயிற்சி இப் பாடநெறிகள் ஊடாக சிறப்பு பயிற்சியாக வழங்குவதாகும். மேற்படி பாடநெறிகள் ஓராண்டு கால பாடநெறிகளாக செயற்படுத்தப்படுவதோடு அது ஆறு மாத கால கோட்பாட்டு மற்றும் செய்முறை (Theoretical and Practical பயிற்சியை தொடர்ந்து ஆறு மாத கால கைத்தொழில்துறை சார் (Industrial Training) பயிற்சி காலப்பகுதியுடன் கூடியது.

# Coca-Cola Sri Lanka வுக்கு விருது




60 வருடங்களுக்கும் மேலாக நாட்டில் இயங்கி வரும் முன்னணி குளிர்பான வர்த்தக நாமமான Coca-Cola Sri Lanka> SLIM Kantar People's Awards நிகழ்வில் கௌரவமான "Beverage Brand of the Year" மற்றும் "Youth Choice Beverage Brand of the Year" ஆகிய விருதுகளை பெற்றுள்ளது. 2023, Sri Lanka Institute of Marketing நிறுவனத்தால் (SLIM) நடத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டிலும் இதே பாராட்டுகளை Coca-Cola Sri Lanka பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 18 மாதங்களில், இந்த வர்த்தக நாமம் சந்தைப்படுத்தல் கண்டுபிடிப்புகள் மற்றும் முயற்சிகளில் முன்னணியில் உள்ளது. இலங்கை பார்வையாளர்களுடன் தொடர்ந்து எதிரொலிக்கும் புத்துணர்வு டிஜிட்டல் அனுபவங்களும் இதில் அடங்கும். Coca-Cola Sri Lanka, Daraz மற்றும் Kapruka போன்ற முன்னணி e-commerce தளங்களிலும், Keels, Cargills, Glomark, Spar, Laughs போன்ற முன்னணி ஆன்லைன் சில்லறை விற்பனைச் சங்கிலிகளிலும் Uber மற்றும் PickMe போன்ற விநியோக பங்காளிகளிலும் விரிவான தயாரிப்பு இருப்பைக் கொண்டிருப்பதில் பெருமிதம்

# MICROSOFT IMAGINE CUP 2023 : Sipsara மற்றும் The Green Tycoon அணிகள் இறுதிப் போட்டிக்கு

Microsoft Imagine Cup 2023இல் சர்வதேச மட்டத்தில் போட்டியிடுவதற்கு இலங்கையின் Sipsara மற்றும் The Green Tycoon ஆகிய அணிகள் தகைமை பெற்றுள்ளன. வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய வழிமுறைகளை கட்டியெழுப்புவதற்காக Microsoft இனால் முன்னெடுக்கப்படும் மாணவர்களுக்குரிய சர்வதேச போட்டியாக Microsoft Imagine ஊரி அமைந்துள்ளது.

உலகின் பல்வேறு பாகங்களைச்




சேர்ந்த மாணவர்களுக்கு தமது தொழில்முயற்சியாண்மை திறன்களை வெளிப்படுத்தவும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் காணப்படும் மிகவும் சிக்கல் நிறைந்த விடயத்துக்கு தொழில்நுட்பசார் தீர்வொன்றை கட்டியெழுப்ப வழிகோலும் வகையிலும் அமைந்துள்ளது.

மூன்று பிராந்தியங்களின் 48 அணிகளில் இலங்கையின் இரு அணிகளும் அடங்கியுள்ளன.

கல்விப் பிரிவில் போட்டியிட்டிருந்த SLIIT ஐச் சேர்ந்த Sipsara அணியினால், ந–பயிலல் கல்விக் கட்டமைப்பு down syndrome குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

Artificial Neural Networks மற்றும் Machine Learning போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, முதலாவது இணைய அடிப்படையிலான அப்ளிகேஷன் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக down syndrome குறைபாடுடைய சிறுவர்களின் திறன்கள் கணிப்பிடப்பட்டு, அவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கு வினைத்திறனான முறையில் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகள் பற்றிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.